https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-3 July 2025

Published on 14, July-2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கு. அழகிரிசாமியின் குழந்தை உலகம்

**வே. துர்காதேவி**
முனைவர் பட்ட ஆய்வாளர் (முழு நேரம்), தமிழியல்துறை

**முனைவர் மு. பாலசுப்பிரமணியன்**
பேராசிரியர், நெறியாளர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
அண்ணாமலை நகர்
சிதம்பரம் 608 002

**ஆய்வுச்சுருக்கம்**

*எழுத்தாளர்கள் தங்கள் படைப்புகளில் குழந்தைகளைப் பற்றி பேசினாலும் அவர்களின் இயல்புகளையும் உணர்வுகளையும் குழந்தைகளின் நிலையிலிருந்து எழுதுவது தனித்துவமானது. அங்ஙனம் குழந்தைகளைப் பற்றி குழந்தைகளும் வாசிக்குமாறு எழுதுவோர் 'குழந்தை இலக்கிய எழுத்தாளர்கள்' எனப்படுகின்றனர். குழந்தை எழுத்தாளராக இல்லாமல் தனது படைப்புகளில் குழந்தைகளின் உணர்வுகளை நுட்பமாகப் பேசியவர் கு.அழகிரிசாமி. கரிசல் எழுத்தாளராக அடையாளப்படுத்துவதற்கு முன்பே கரிசல் நில இயல்புகளைப் பேசியது போல், தமிழில் குழந்தை இலக்கிய வகைமைப் பற்றி பேசுவதற்கு முன்பே குழந்தைகளின் உலகத்தை எழுத்தில் காட்டினார். அவரின் குழந்தை உலகம் உணர்வுகளின் குவியலாகவும், அன்பின் ஊற்றாகவும் இருப்பதை அறியலாம். அவர் படைத்துள்ள குழந்தை மாந்தர்கள் வறுமையில் வாடுவோராகவும், அடிப்படை வசதிகள் இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர். என்றாலும், அன்பு நிறைந்தவர்களாக; ஆதரவை நாடுகிறவர்களாக உள்ளனர்.*

**திறவுச்சொற்கள்**

*குழந்தை இலக்கியம், குழந்தை இலக்கிய எழுத்தாளர்கள், கவிமணி, பாரதி, அழ.வள்ளியப்பா, கு.அழகிரிசாமி, கரிசல் இலக்கியம்*

**முன்னுரை**

*ஐரோப்பியர்களின் வருகையால் கிடைத்த நவீன இலக்கியங்கள் தமிழின் இலக்கிய உலகைப் புதுப் பாதைக்குக் கொண்டு சென்றன. நடுத்தர மக்களின் கல்வியும் வாசிப்புப் புத்திலக்கியங்களை வளர்த்தெடுத்தன. வாசிப்பிற்காக எழுதப்பட்ட புத்திலக்கியங்கள் சமூகத்தின் பேசப்படாத விடையங்களை விவாதித்தன. எளிமையும் விமர்சனமும் புத்திலக்கியத்திற்கான அடையாளமாகக் கொள்ளப்பட்டன. இவ் அழகியலோடு 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பலர் எழுதினர். அவர்களில் கு.அழகிரிசாமி (1923–1970) குறிப்பிடத்தக்கவர். சிறுகதையின் வளர்ச்சியில் பங்குபெற்ற முன்னோடி. அவரின் எழுத்துக்கள், நடுத்தர, ஏழை எளியவர்களைப் பற்றியதாக அமைந்திருந்தது. அவரின் கதை மாந்தர்கள் பழைமையைத் தொடர முடியாதவர்களாகவும், கட்டிக் காப்பாற்ற முடியாதவர்களாகவும் உள்ளனர். அத்தகைய மாந்தர்களில் குழந்தைகளும் அடங்குவர்.*

அவரின் குழந்தை உலகம் தனித்துவமானது. குழந்தை எழுத்தாளராகக் குழந்தைகளுக்காக எழுதாவிட்டாலும், அவரின் குழந்தை உலகத்தின் உணர்வுகள் ஆய்விற்குரியதாகும்.

## கு. அழகிரிசாமியின் கதை உலகம்

கு.அழகிரிசாமியின் படைப்புலகம் பெரும் பாலும் கிராமத்து வாழ்க்கையை அடிப்படை யாகக் கொண்டது. குடும்பவாழ்க்கை, மனிதர் களின் மனம், பலவீனங்கள், காதலர்களின் மன எண்ணங்கள், குழந்தை உலகம், கிராமத்து மனிதர்களின் செயல் சிறுமை களைக் காட்டும் வாழ்வின் இயல்புகளை அவரது கதைகள் பேசுகின்றன. அவரின் கதைகள் பெரும்பாலும் கரிசல் நிலத்தைக் களமாகக் கொண்டிருந்தாலும், கி.ரா.வைப் போல் அதை மட்டும் அவர் களனாக்கிக் கொள்ளவில்லை. அவர் புலம்பெயர்ந்த இடங்களில் வாழும் மனிதர்களையும் அவர் களின் வாழ்வியலையும் சுட்டி எழுதியுள் ளார். கு.அழகிரிசாமியின் கதைகளைப் பற்றி,

“அழகிரிசாமி பிறந்த மண்ணையும் அவரோடு வாழ்ந்த மக்களையும் அந்தச் சூழலையும் வைத்து எழுதிய கதைகள் கரிசல் மண் வாசம் வீசும் மற்றவை எல்லாம் பூமிக்கு பொதுவானவை. தமிழ் சிறுகதையின் தரத்தை இந்திய அளவுக்கு உயர்த்திட அழகிரிசாமியின் அமரத்துவம் பொருந்திய சிறுகதைகளும் ஒன்று “சுயரூபம்” பசி அதன் அரக்க முகத்தையும் மனிதர்களின் கையாலாகா நீர்க்கதி நிலையையும் காட்டுகிறது. திரிவேணி கதை தனிவகை அவற்றின் நடையும் மொழியும் பெரும் பான்மை கதைகளில் இருந்து வேறுபட்டவை. கவியும் காதலும், மீனா, காதல் போட்டி, வளையல் காரன், போன்ற கதைகளில் வரும் கதைமாந்தர்கள் காதலின் உணர்ச்சிகளை மௌனமாக உணர்த்துதல் அழகிரி கதை களின் பிரதானமான அம்சங்களைக் கொண்டு ள்ளது.” எனத் தமிழ்செல்வன் குறிப்பிடு கிறார். அவர் படைத்துள்ள சிறுகதைகளின் தனித்துவமாகக் கருதப்படுவது அவரின் குழந்தை உலகமாகும்.

## கு.அழகிரிசாமி விவரிக்கும் குழந்தை உலகம்

தமிழின் சிறந்த சிறுகதைகளில் கு.அழகிரி சாமி கதைகளுக்கு முதல் வரிசையில் இடம் உண்டு. அதிலும் குறிப்பாக குழந்தை உலகத்திற்கு என மையமிட்டுப் புகழ்பெற்ற பல கதைகளை அவர் எழுதியுள்ளார். எழுத்தாளர் அழகிரிசாமியின் கதைகளில் குழந்தைகளின் தனித்த குணங்கள் அழகாகப் பதிவாகியுள்ளன. அவர் தம் கதைகளில் பல்வேறு கதைமாந்தர்களைப் படைத்திருந் தாலும் குழந்தைகளைப் பல கதைகளில் கதைமாந்தர்களாகப் படைத்துள்ளார் குமாரபுரம் ஸ்டேஷன், பேதமை, தெய்வம் பிறந்தது, அன்பளிப்பு, ராஜா வந்திருக்கிறார், தம்பிராமையா, இவர் கண்ட ஒரே கனவு, காற்று போன்ற கதைகள் குழந்தைகளை முதன்மையாகக் கொண்டு படைக்கப்பட்ட வையாகும். இக்கதைகளில் குழந்தைகளின் செயல்களை மட்டும் இன்றி அவர்களின் மனநிலையையும் உளவியல் நோக்கில் படைத்துள்ளார். குழந்தைகளின் விருப்பு, வெறுப்பு, ஏக்கம், எதிர்ப்பு, பயம், சிரிப்பு, அழுகை போன்ற உணர்வுகளைக் கதையாக வடிவமைத்துள்ளார்.

### கல்வி

கல்வி ஒரு சமுதாயத்தின் அடித்தளம் மற்றும் ஒரு தனிநபரின் அறிவு, திறமை, பண்பாடு, வாழ்க்கைத் திறன்களை வளர்க்கும் சக்தி வாய்ந்த கருவி.

**“கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு**

**மாடல்ல மற்றை யவை”** (குறள். 400)

தனக்கு உரிமையாக மனிதன் ஈட்டிக் கொள்ள வேண்டிய அரிய பெரிய செல்வம் கல்வியே என வள்ளுவர் கூறுகிறார். அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியை அதனை வழியே விழுமிய நலன்கள் அனைத்தையும் எளிதில் பெற்றுக் கொள்ளலாம் என நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். குழந்தை உள்ளம் சஞ்சலம் இல்லாதது, உல்லாசமான, சுறுசுறுப்பாக உள்ளது மாசு படியாதது தன்பால் படித்ததை நன்கு பற்றிக் கொள்ளும் திறமை வாய்ந்தது அதனால் இளமைப் பருவம் கல்வி வளமாய் அமைந்து வருகிறது

**“இளமையில் கல்”**

என அவ்வையார் கூறியுள்ளார். இக்கல்விக்கு முன்னுரிமைக் கொடுக்கும் கு.அழகிரிசாமி, அதனை கதைகளில் வலியுறுத்தியுள்ளார். குறிப்பாகக் குழந்தைகளின் கல்விக்கு முக்கியத்துவம் அளித்துக் கதைகள் படைத்துள்ளார். “குமரபுரம் ஸ்டேஷன்” என்னும் கதையில் ஸ்டேஷன் மாஸ்டர் தர்க்கங்கள், ஒரு தந்தையைப் போல உயர்கல்வி சேர்க்கைக்காகத் தன் மாணவர் களைத் தயார் செய்து அனுப்பும் ஆசிரியர், தன் பிள்ளையோடு ஊர்ப் பிள்ளைகளைப்

பள்ளி சேர்க்கைகாக அழைத்து வரும் தந்தை, ஏழை போர்ட்டரின் உச்சரிப்பு எல்லாமே கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன. கிராம குழந்தைகளின் கல்விக்காகப் பாடுபடும் ஒவ்வொரு மனிதர்களின் இயல்புகளைச் சுட்டுவதோடு, குழந்தைகளின் உணர்வுகளையும், கல்வி ஆர்வத்தையும் கதையில் விவரித்துள்ளார் ஆசிரியர். அங்ஙனம் பள்ளியில் சேர்க்கைப் பெற்ற மகிழ்ச்சியைக் கதையின் இறுதியில் இங்ஙனம் அழகிரிசாமி விவரிக்கின்றார்.

**“எல்லாரும் பாஸ் சுப்புராம ஐயர் பையன்கள் நால்வரும்.**

**“ஆனந்த கண்ணீர் பொங்கிவிட்டது”**

**“அந்த ஸ்டேஷனையே பெரிய பள்ளிக்கூடத்தில் என்று வாய்குள்ளே**

**ஒருமுறை சொல்லிக் கொண்டு ஐயர்”**

*சிறுகதைத் தொகுப்பு 2 (ப-612)*

**வறுமை**

வறுமை, ஏழ்மை என்பது உணவு, உடை, உறைவிடமாகிய அடிப்படைத் தேவைகள் கூட இல்லாத உயிர் வாழும் துன்ப நிலையைத் தான் வறுமை என்று அழைக்கிறோம். ஒருவர் வாழ்வில் கொடியது வறுமைதான் என்று,

**“இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**

**இன்மையே இன்னா தது”** *(குறள். 1041)*

என்னும் குறள் வழி விளக்கியுள்ளார். இளமையில் வறுமை, கல்வி, வேலைவாய்ப்பு என எல்லாவற்றையும் பாதித்து விடுகிறது.

**“சோற்றுக்கு தரித்திரம் ஏற்படுவது போல் காற்றுக்குமே**

**தரித்திரம் ஏற்பட்டு விட்டது”**

*சிறுகதைத் தொகுப்பு 2 (ப 705)*

என்ற வரிகள் வழி அழகிரிசாமியின் கதைகள் வறுமையை அதிகமாகப் பேசப் படுகின்றன. இடவசதி இல்லாத ஒட்டுக் குடித்தன வாழ்க்கையைப் பற்றி காற்று என்னும் சிறுகதை வழி வறுமையை உணரலாம்.

**“ராமையா அண்ணா உன்னை நடுக்காட்டில் தவிக்க விட்டு**

**இன்பலோகத்துக்கு வந்துவிட இல்லையடா நான் வேறொரு**

**நடுகாட்டுக்கு தான் போய்**

**கொண்டிருக்கிறேன்”**

*சிறுகதைத் தொகுப்பு 2 (ப.526)*

என்ற வரிகள் உருக்கமானவை தம்பி ராமையா கதைகளில் வறுமையின் ஓட்டமும் மனிதனின் ஓட்டமும் மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார். அண்ணன் வரும் போது விதவிதமான உணவுகளைக் கண்ட தம்பிக்கு அண்ணன் மீது கோபம் வருவது போல் அமைந்திருக்கின்றது. இக்கதை போல் ஒவ்வொரு கதையிலும் வறுமையின் ஒவ்வொரு பாதிப்பையும் மிக நுட்பமாக விவரித்துள்ளார். வறுமையில் பெரியவர்கள் மட்டுமல்லாது, குழந்தைகள் படும் துயரை அதிகமாகப் பேசியுள்ளார். ராஜா வந்திருக் கிறார் கதையில் வறுமையில் கொண்டாடப் படும் தீபாவளியை மனித உணர்வுகளின் வழியே விவரித்திருக்கிறார்.

**ஏக்கம்**

ஏக்கம் என்பது ஒரு ஆசையை அடைய முடியாமல் அது கிடைக்காத போது ஏற்படும் ஒரு வேதனை அல்ல வருத்தம் நிறைவேறாத ஆசை, விரும்பியது கிடைக்காத துக்கம் என்று சொல்லலாம். ஏக்கம் ஒரு கசப்பான இனிப்பு. ஆனால், பெரும்பாலும் நேர்மையான உணர்ச்சியாகும். ஒருவர் தனிப்பட்ட முறையில் அர்த்தம் உள்ள நினைவுகளைப் பற்றி குறிப்பாக நெருங்கிய மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும் நினைவுகளைப் பற்றி சிந்திக்கும்போது உணரப்படுகிறது. ஏக்கம் என்பது ஒவ்வொரு மனிதருக்கும் உரியது. குழந்தைகளுக்கான ஏக்கம் என்பது அவர்களின் வாழ்வியல் சூழல்களைப் பொருத்து மாறுபடும். வறுமையில் வாழும் அழகிரிசாமியின் குழந்தை மாந்தர்கள் உணவு, உடை, உறைவிடம், உறவு, கொண்டாட்டம் எனப் பல விடையங்களுக்கு ஏக்கப்படுகின்றனர். அன்பிற்காக ஏங்கும் குழந்தைகளையும் கதைகளில் காண முடிகின்றது. தாயின் மரணத்தால் துன்பப்படும் குழந்தைகளின் அவல நிலையை “இருவர் கண்ட ஒரே கனவு” என்னும் கதை விவரிக்கின்றது. இதில் மரணம் நிகழ்ந்துக் கொண்டிருக்கும் போது குழந்தைகள் வேறொரு உலகத்தில் நடனமாடிக் கொண்டிருப்பதாகக் கதை அமைகிறது. தாயை இழந்த சிறுவர்களுக்கு இரவு நேரத்தில் இருவருக்கும் ஒரே கனவு வருகிறது கனவில் தாயும் வருகிறாள். அக் குழந்தைகள் தாயின் பாசத்திற்கு ஏங்குவ

தாகவும், அவ் ஏக்கம் இருவர் கனவிலும் வருவதாகக் கதையாடப்பட்டுள்ளது. அதனை,

**“என் கண்ணுகளா இந்த சீலை இனி**
**உங்களுக்குத்தான் உங்களுக்குக்**
**கொடுக்கத்தான் அம்மா வந்து**
**இருக்கேன் நான் செத்துப் போகவில்லை”**
சிறுகதைத் தொகுப்பு 1 (ப566)

அன்புள்ளம் கொண்ட தாயின் எண்ணங்கள் கனவில் இருவருக்கும் வெளிப்பட இறந்த தாயின் மீது ஏக்கம் கொண்டு அலைகிறார் கள் அக்குழந்தைகளின் அவலத்தை அவர் களின் வழியே காட்டுகிறார்.

'காற்று' எனும் சிறுகதையில் வரும் கற்பகம் வறுமையில் தத்தளிக்கிறாள். கற்பகத்துக்கோ பள்ளிக்கூடம்போவது என்றால் அளவுகடந்த மகிழ்ச்சி. பள்ளிக்கூடமே அவளுக்கு சொர்க்க மாக இருந்தது. அவளின் தந்தை பள்ளிச் செல்ல ஏற்பாடு செய்கிறார். அந்தநிலையில், கற்பகத்தின் வாழ்வில் உண்மையிலேயே ஒரு புதுயுகம் ஆரம்பமாகிவிட்டது விடுமுறை நாட்களில்கூடப் பள்ளிக்கூடம் போனால் தேவலை என்று நினைத்தாள் (காற்று, ப. 763) என்று கூறுவதன் மூலம் கற்பகம் பள்ளிக் கூடம் போவதை எந்தளவிற்கு விரும்பி இருக்கிறாள் என்பதை உணரமுடிகிறது. ‘இரு சகோதரர்கள்’ என்னும் கதையில் வரும் ராமகிருஷ்ணன் தன் தம்பியான சுப்ரமணிய னைக் கற்க வைப்பதையும் இங்கு நோக்கலாம்.

## அறியாமை

அறியாமை என்பது ஒரு பொருளின் உண்மைத் தன்மையை அறியாமல் எது நல்லது கெட்டது எனத் தெரியாமல் இருப்பது. இது சில உண்மைகள், கருத்துக்கள் அல்லது திறன்களைப் பற்றி அறியாத ஒருவரைக் குறிக்கலாம்.

**“நெஞ்சில் கவலை நிதமும் பயிராக்கி**

**அஞ்சி உயிர் வாழ்தல்”** (மகாகவி பாரதியார்)

என்னும் வரிகளில் பாரதியார் அறியாமையை நீக்கும் படி குறிப்பிடுகிறார். ‘அன்பளிப்பு’ என்னும் சிறுகதையில் வரும் இளைஞர் குழந்தைகளுடன் நெருக்கமாகப் பழகும் இயல்புடையவர். சாரங்கன் என்னும் சிறுவன் மற்றச் சிறுவர்களோடு சாதாரண மாகத் தான் இளைஞர் வீட்டுக்கு வருகிறான். தனக்கு நெருக்கமான அல்லது விருப்பமான இரண்டு குழந்தைகளுக்கு மட்டுமே டைரிகளை அன்பளிப்பாகத் தருகிறான் இளைஞன். சாரங்கன் ஆழ்மனதில் அது ஓர் ஏக்கமாக உருவெடுக்கிறது. வேறொரு தருணத்தில் தன் வீடுவரைக்கும் அழைத்துச் செல்லும் சாரங்கன் ஒரு புதிய டைரியை எடுத்துக் கொடுத்துவிட்டு “என் பிரியமுள்ள சாரங்கனுக்கு அன்பளிப்பு” என எழுதி கொடுக்கும் படி கேட்டுக் கொண்டான்.

**என் பிரியமுள்ள சாரங்கனுக்கு அன்பளிப்பு**
சிறுகதைத் தொகுப்பு 1 (ப316)

தன்னால் புறக்கணிக்கப்பட்ட சிறுவனின் செயல்பாடு மூலம் தான் அறியாமையை உணரும் வகையில் இக்கதையை அமைத்துள்ளார்.

## போட்டி

போட்டி மனிதனின் திறமைகளை வெளிக் கொண்டுவரும் ஒரு சிறந்த மேடையாகும். எதிலும் போட்டியிருந்தால் தான் அந்தத் துறையில் முன்னேற்றம் சாத்தியமாகிறது. போட்டி நமக்கு நம்பிக்கை, நெருக்கடி, மேலாண்மை, முயற்சி செய்யும் மனப்பாங்கு போன்ற நல்ல பண்புகளை வளர்க்கிறது. குழந்தைகள் போட்டி மனப்பான்மையுடன் நாளும் நடப்பதைக் கு. அழகிரிசாமி தனது ‘ராஜா வந்திருக்கிறார்’ என்னும் கதையின் வழி வெளிப்படுத்துகிறார். குழந்தைகளுக்குள் நடக்கும் போட்டி ஆராம்பத்தில் விளையாட் டாகப் பார்க்கப்பட்டாலும், ஒரு கட்டத்தில் பணம், வசதி என நீண்டு, மனிதத்தில் வந்து முடிகிறது. இப்படிக் குழந்தைகளுக்குள் நடக்கும் போட்டியை அடிப்படையாகக் கொண்ட ராஜா வந்திருக்கிறார் கதை தமிழ்ச் சூழலில் புது முயற்சி என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுவர். ஒன்று இன்னொன்றால் சமப்படுத்தி விளையாடும் குழந்தை உலகம் ஒரு தளம். தன் வீட்டை நாடி வந்த அனாதைச் சிறுவனைத் தன் பிள்ளைகளோடு பிள்ளையாக உட்கார வைத்து உணவு கொடுத்துத் தாய்மை உணர்வோடு உபசரிக்கும் தாயம்மாவின் உலகம் இன்னொரு தளம். ஒன்றிலிருந்து இன்னொன்று விலகிச் செல்லாத வகையில் இரண்டையும் கச்சிதமாக இணைக்கிறார் கு.அழகிரிசாமி.

**“ஒரு குருட்டுப் பிச்சைக்காரனின் சோற்றுக்**
**குவலையில்**

**மண்ணை அள்ளி போட்டு விட்டார்கள்”**

**“குருடன் பெற்ற பிள்ளைகள் தான்**

குருடன் சோற்றில் மண்ணள்ளி போட்டுச்
சிரித்தவர்கள்”

சிறுகதைத் தொகுப்பு 1 (ப597)

என்ற வரிகளின் மூலம் குருட்டுத் தந்தையின் வலியை உணராத பிள்ளைகளின் அறியாமைப் பேசப்படுகிறது.

## குழந்தை உளவியல்

குழந்தைகளின் பிறப்பு முதல் இளமைப் பருவம் வரை உள்ள உளவியல், சமூக, உணர்ச்சி மற்றும் அறிவாற்றல் வளர்ச்சி களை உள்ளடக்கியது. குழந்தைகளின் மனதில் ஏற்படும் உளவியல் தாக்கம் அவர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கின்றது. குழந்தை வளர்ப்பு உளவியல் அடிப்படை யில் இருந்தால், குழந்தைகளின் சமூக, உணர்ச்சி மற்றும் அறிவுசார் திறன்களை மேம்படுத்த உதவும் என்ற நம்பிக்கை கு.அழகிரிசாமியின் கதைகளில் வெளிப் படுகிறது. ‘தெய்வம் பிறந்தது’ என்ற சிறுகதையில் தவம் இருந்து பெற்ற ஜகந்நாதனை நல்ல முறையில் வளர்த்து விட்டால் தனக்குரிய பொறுப்பு நிறைவடை யும் என்று ஐயர் கருதுகிறார். அதனால் தம் மகனுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்லிக் கொடுத்து கண்ணும் கருத்துமாக வளர்த்து வருகிறார். மற்றவர்களை எப்படியெல்லாம் நினைக்க வேண்டும், அவர்களிடம் எப்படி நடந்துக் கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொடுப்பதை, “பள்ளிக்கூடத்தில் பாடம் கற்பிக்கும் வாத்தியாரைக் கடவுளாக எண்ணி வணங்க வேண்டும். கூடப் படிக்கும் மாணவர்களிடத்தில் அன்பாக இருக்க வேண்டும். அவர்கள் தவறு செய்தாலும் பொறுத்துக் கொள்ள வேண்டும். வீட்டுக்கு வரும் பிச்சைக்காரர்களை விரட்டாமல், அம்மாவை அழைத்துச் சாதம் போட்டு அனுப்பச் செய்ய வேண்டும். கீரை கொண்டுவரும் கிழவி, பால் விற்பவள், தெருவைப் பெருக்கும் முனிசிபாலிடிச் சேவகன் ஆகியோரைக் கூட 'நீ', 'நான்' என்று பேசக்கூடாது. இப்படியெல்லாம் ஐயர் செய்த உபதேசங்களுக்குக் கணக்கில்லை. (தெய்வம் பிறந்தது, ப. 655) இதில் தந்தையின் நல்ல வளர்ப்பு முறையை அறியமுடிகிறது. ஒரு குழந்தையை எப்படி வளர்க்க வேண்டும் என்பதற்கு சான்றாக இந்நிகழ்வு உள்ளது.

## முடிவுரை

கு. அழகிரிசாமி தமிழ்ச் சிறுகதை முன்னோடிகளில் ஒருவராக இருந்து பல புதுமைகளைப் படைத்துக் காட்டியுள்ளார். நிலவியல் சார்ந்த எழுத்தாளராகத் தொடங்கி உலகப் பார்வையோடு பன்முகப் படைப்புத் தளத்தில் இயங்கினார். அவரின் எழுத்துக்களில் வெளிப்படும் மனிதர்கள் யதார்த்தமான நடுத்தரம் மற்றும் ஏழை எளியவர்கள். அம்மாந்தர்களில் காணப்படும் குழந்தைகள் உணர்வுகளால் நிரம்பியவர்கள். எளிய வாழ்க்கையின் அடையாளமாக இருக்கும் வறுமை அழகிரிசாமியின் குழந்தை உலகத்தை இயக்குகின்றது. அன்பு நிறைந்தவர்களாகவும், அன்பிற்கு ஏங்குபவர் களாகவும் அவர்கள் காணப்படுகின்றனர். குழந்தைகளைப் புரிந்து கொள்வதுதான் குழந்தை வளர்ப்பின் முதற்படி என்ற படிப்பினையை அழகிரிசாமியின் கதைகள் வழங்குகின்றன.

## துணைநூற்பட்டியல்

1. பழ. அதியமான் (தொ.ஆ), கு.அழகிரிசாமி சிறுகதைகள் (1960-1969) காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2022
2. திருக்குறள், பரிமேலழகர் திருக்குறள் மூலமும் உரையும், தமிழ் பதிப்பு சனவரி 2020
3. பாரதியார், பாரதியார் கவிதைகள், பூம்புகார் பிரசுரம், சென்னை, ம,ப 1976
4. செகவீரபாண்டியனார், கல்விநிலை, மதுரை பதிப்பகம், மதுரை, 1959
5. ஜோ.அருணாதேவி, தொல்காப்பியரின் உளவியல் பார்வை, முதற்பதிப்பு செப்டம்பர் 2008, வெளியீடு அகரம் மனை எண்1 நிர்மலாநகர், தஞ்சாவூர் - 7